# பண்டைய தமிழர்களின் நாட்டுப்புறக் கலைகள்

**முனைவர்.ம.தமிழ்மதி**
**உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை,**
**தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை -609 001**
**மின்னஞ்சல் : thamizhmathijayabal2019@gmail.com**

**18**

**ஆய்வுச் சுருக்கம்:**

இயல்பாகத் தோன்றி இயற்கையோடியையந்து உணர்ச்சியின் உறைவிடமாய் மக்களை களிப்படையச் செய்யும் கலைகளே நாட்டுப்புறக் கலைகள். கணினி மயமான இக்காலச் சூழலில் நாட்டுப்புறக் கலைகள் பற்றி ஆய்வு மேற்கொள்வதன் மூலம் பண்டையத் தமிழர்களின் வரலாற்றையும், மரபுகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. தெருக்கூத்து, கரகாட்டம், வில்லுப்பாட்டு, கணியான் ஆட்டம், ஒயில்கும்மி, புலியாட்டம், தோற்பாவைக்கூத்து, சிலம்பாட்டம் போன்ற கலைகள் பண்டையத் தமிழர்களின் வாழ்வியலில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. மன மகிழ்ச்சிக்காகவும், மனித உணர்வின் வடிகாலாகவும், உணர்ச்சியின் வெளியீடாகவும் நாட்டுப்புறக் கலைகள் இருந்துள்ளன. அதனால் தான் இன்றும் அவைகள் நிலைத்து நிற்கின்றன. இயற்கை அறிவும் ஆழ்ந்த உணர்ச்சியும் , எளிமையும், நேரடித்தன்மையும் இக்கலைகளில் மறைந்திருக்கின்றன . இக்கலைகள் சமயத்துடனும், பின்னர் சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றன. நாட்டுப்புற மக்களின் அழகியல் உணர்வுகளின் மையமாக இக்கலைகள் விளங்குகின்றன. இக்கலைகளை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச்செல்வதன் மூலம் ஆரோக்கியமான மற்றும் வளமான வருங்கால சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள் :** தெருக்கூத்து ,கரக ஆட்டம் , வில்லுப்பாட்டு, கணியான் ஆட்டம், புலியாட்டம் ,தோற்பாவைக்கூத்து

**முன்னுரை :**

மனிதனுக்கு இயற்கையாகத் தோன்றுகின்ற உணர்வே கலை உணர்வு ஆகும். நாட்டுப்புறக் கலைகள் மக்கள் மனமகிழ்வோடு வாழ்வதற்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளன. மனித உணர்வுகள் இவைகளோடு ஒன்றிணைந்து உணர்ச்சியின் வெளியீடாக கலைகள் இருந்துள்ளன. அதனால் தான் கால வெள்ளத்தைக் கடந்து நின்று வாழ்ந்து வளர்ந்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் நாட்டுப்புறக் கலைகளான தெருக்கூத்து, கரகாட்டம், வில்லுப்பாட்டு, கணியான் ஆட்டம், ஒயில்கும்மி, புலியாட்டம் தோற்பாவைக்கூத்து, சிலம்பாட்டம் போன்றன குறிப்பிடத்தக்கன.

கூத்து பழமையின் சின்னமாக பண்பாட்டின் எச்சமாக விளங்குகிறது. தெருக்கூத்தின் வளர்ச்சிதான் நாடகமெனின் மிகையாகாது. இதனை ஒரு பழமொழி எடுத்துரைக்கின்றது.

“கூத்தாடி கிழக்கே பார்ப்பான்

கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்”

கூத்தானது விடியும் வரை நடைபெறும் இது பலவகைப்படும். கூத்துக்கள், பொதுவாக பாவைக்கூத்து, கழைக்கூத்து, தெருக்கூத்து, மரப்பாவைக்கூத்து, தோற்பாவைக்கூத்து என்பன. தமிழர்களின் வீர விளையாட்டாக புலியாட்டம், சிலம்பாட்டம் போன்றனவும், விழிப்புணர்வை ஏற்படுத்த வில்லுப்பாட்டும், பக்தியை வெளிப்படுத்த கரகாட்டமும், கணியான்கூத்தும் நாட்டுப்புற மக்களால் பேணி பாதுகாக்கப்பட்டுள்ளன .

**தெருக்கூத்து :**

தெருக்கூத்து என்பது தமிழகத்திலும், இலங்கையின் தமிழ் பேசும் மக்களாலும் நடத்தப்படுகின்றது. தெருவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து ஆகும். இவைகள் ஒரு பொழுதுபோக்கு சடங்கு மற்றும் சமூகநிலையைக் கூறும் தகவல் ஊடகமாகும். எளிய முறையில், திறந்த வெளியில் நடைபெறும். இரவு முழுவதும் நடைபெறும். இது தமிழர்களின் பழங்கலைகளில் ஒன்றாகும். (1) தொன்மம், (2) நாட்டார் கதை, (3) சீர்திருத்தக்கதை அல்லது விழிப்புணர்வுக்கதை ஏதேனும் ஒன்றை வைத்து தெருக்கூத்து நடைபெறும். நாடகமேடையோ, காட்சித்திரைகளோ இல்லாமல் மிகவும் எளிமையான முறையில் திறந்தவெளி அரங்கில் நடைபெறும் கூத்து தெருக்கூத்து ஆகும். மழையை விரும்புவோர் விராட பருவத்தையும், பிள்ளைப்பேற்றை விரும்புவோர் சத்தியவான் சாவித்திரியையும், திருமணம் வேண்டுவோர் மீனாட்சி கல்யாணத்தையும் நடத்துவர். கூத்திலும் சில மரபுகளை தமிழர்கள் பின்பற்றினர். துதி, கட்டியக்காரன், வரவு, கதாபாத்திரங்கள், திரைக்குள்ளிலிருந்து பாடல், திரைக்கு வெளியே பாடல், அறிமுகப்படுத்திக் கொள்ளல், கதைகூறல், மங்களம் பாடுதல் என ஒரு மரபு பின்பற்றப்படுகிறது. இதிகாசங்கள், புராணங்கள், சரித்திர நிகழ்ச்சிகள், வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஆகியன தெருக்கூத்து நிகழ்ச்சிக்கு கருப்பொருளாகின்றன.

**கரக ஆட்டம் :**

கரக ஆட்டம் மாரியம்மனுடன் தொடர்புடையது. கரகம் என்ற சொல்லாட்சியைத் தொல்காப்பியத்திலும் புறநானூற்றிலும் காணமுடிகின்றது.

“நூலே கரகம் முக்கோல் மனையே”[1] தொல்பொருள்- நூ - 615
“நீரற வரியாக கரகத்து“[2] புறம்- பா- 1

விழாக்காலத்தில் எடுக்கும் கரகத்தை சக்திக்கரகம் என்றும், தொழில்முறையாக எடுக்கும் கரகத்தை ஆட்டக்கரகம் என்றும் கூறுவர். பக்தர்கள் எடுத்துச் செல்வது சக்திக்கரகமாகும். இக்கரகத்தில் மேளமும், தப்பும்,பிற தாளக்கருவிகளும் இடம் பெறுவதுண்டு. ஆட்டக்கரகத்தில் நையாண்டி மேளம் இடம் பெறுவதுண்டு. சக்திக் கரகத்தில் கும்பத்தில் தண்ணீர் இருக்கும். அதற்கு மேலே வேப்பிலை, நடுவே தேங்காய் கும்பத்தைச் சுற்றி நூல் சுற்றியிருக்கும். விரதமிருப்பவர்கள் கும்பத்தைச் சுமந்து வருவர். கும்பத்தைக் கோயிலில் வைத்தவுடன் விரதம் முடிந்துவிடும்.

ISSN:2582-9599



ஆட்டக்கரகத்தின் அடிப்பாகம் குழியாக இருக்கும். கரகாட்டத்தின் நடுவே கோமாளி ஆட்டம் நடைபெறும். இவ்வாட்டத்தைத் தஞ்சை, இராமநாதபுரத்தில் கரகச்செம்பு ஆட்டம் என்றும், மதுரை மாவட்டத்தில் கரகாட்டம் என்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் கும்ப ஆட்டம் என்றும் கூறுவர்.

**வில்லுப்பாட்டு :**

நாட்டுப்புறக் கலையிலே மிகச்சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது வில்லுப்பாட்டாகும். 14ஆம் நூற்றாண்டில் அரசப்புலவர் ஒருவரால் வில்லுப்பாட்டு தோற்றுவிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. வில்லுப்பாட்டின் உறுப்புக்களாக அமைந்த இசைக்கருவிகள் வில், உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவையாகும். பம்பை, உறுமி, தக்கை, துந்துபி என்ற நான்கு கருவிகளும் சேர்த்து எட்டு வகையான பக்கக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன என அறிகிறோம். வில்லுப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்றெல்லாம் கூறுவர். வில்லுப்பாட்டின் தாயகமே குமரி, நெல்லை மாவட்டங்கள் எனக் கூறலாம். “வில்லுப்பாட்டின் தோற்றத்தைப் பற்றி கவிஞர் சுப்பு.ஆறுமுகம் குறிப்பிடும் பொழுது தென்பாண்டி நாட்டுப்பகுதியில் அன்றுள்ள வேடர்கள் வேட்டையாடி விட்டு வந்து மரத்தடி நிழலில் அமர்ந்த போது தோளிலிருந்த வில்லை மடியில் சாய்த்து, அம்பை அந்த நாணில் தட்டித் தட்டிப் பாட்டைத் துவக்கியிருக்கிறார்கள்”[3]. அதேப்போல வில்லுப்பாட்டின் சிறப்பினை தெய்வச்சிலையார் விறலிவிடு தூது எனும் நூலில் வில்லுப்பாட்டு பற்றிய குறிப்பு காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். வில்லுப்பாட்டின் சிறப்பினை முக்கூடற்பள்ளும் சிறப்பித்துக் கூறுகின்றது.

வில்லுப்பாட்டில் கதையினை துவங்கும் முன்பு காப்பு விருத்தம் பாடுவர். விநாயகர் வணக்கம் பாடப்படும். குருவடியையடுத்து அவையடக்கமும் பின்னர் நாட்டுவளம் வரலாறு கூறி இறுதியில் வழிபாடல் நடைபெறும். கோயில் விழாக்களில் முழங்கி வந்த கலை இன்று அரசியல் பிரச்சாரத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இக்கலையை நாடறியச் செய்த பெருமை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனையேச் சாரும். வில்லுப்பாட்டுக்கலை கதைப்பாடல்கள் பலவற்றை வாழ வைத்த பெருமைக்குரிய கலையாகும்.

**கணியான் ஆட்டம் :**

கணியான் ஆட்டத்தை மகுட ஆட்டம் என்றும் கூறுவர். காளி ஆட்டமும் கணியான் கூத்தும் இல்லாக் கோயிலே இல்லை என்ற பழமொழி திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்குகிறது. கணியான் ஆட்டத்தில் ஏழுபேர் பங்கு பெறுகின்றனர். தலைமைப் பாடகர் ஒருவர். பெண் வேடதாரி இருவர். மகுடம் வாசிப்பவர் மூவர். தாளம் ஒருவர். ஆண்களைக் சார்ந்தே இயங்கும் இக்கலை 16ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பழமையான கலை என்பது ஆய்வாளர்களின் கருத்தாக அமைகின்றது. கணியான் ஆட்டத்தை கணியான் சாதியினரே நடத்துகின்றனர். இவ்வகை ஆட்டத்தில் செய்முறைகளாவன, கொடைக்கு முன் எட்டு நாள் விரதமிருப்பர். செவ்வாய், வெள்ளிக்கிழமை கொடை நடைபெறும். வெள்ளிக்கிழமை மத்தியானம் எண்ணெய் தேய்த்துக் குளிப்பர். கோயிலில் வெள்ளிக்கிழமை கொடை நடைபெறும். சுடலைமாடன் பெயரில் பாட்டு பாடுவர். இவரே அருள் வந்து

ஆடுவர். கணியான் கையை வெட்டி இரத்தத்தை இலையில் ஊற்றுவர். 21 இலைகளில் இரத்தம் ஊற்றப்படும். மேளதாள ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். கொடை இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும். குணபதி வணக்கத்துடன் ஆரம்பிப்பர். தலைமைப்பாடகர் பாட்டு பாடுவார். ஒருவர் உதவிப்பாடகராக இருப்பர். தலைமைப் பாடகர் பாடியதை மற்றவர்கள் மகுட ஆட்டத்துடன் மீண்டும் பாடுவர். பெண் வேடதாரிகள் தாளத்திற்கேற்ப ஆடுவர். அதிகாலை நான்கு மணிவரை நடைபெறும். ஆட்டத்தினிடையே மகாபாரத, இராமாயணக் கதைகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் கூறப்படும். கணியான் ஆட்டத்தில் பெரும்பாலும் சுடலைமாடன் கதை, இசக்கியம்மன் கதை, மந்திர மூர்த்தி கதை, சிறுத்தொண்ட நாயனார் கதை முதலியவற்றைக் கூறுவர். தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் குறிப்பாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கிராமப்புறக் கோயில் கொடை விழாக்களில் கணியான் ஆட்டம் நிகழ்த்தப்படுகின்றது.

**ஒயில்கும்மி அல்லது ஒயிலாட்டம் :**

ஆடவர்கள் ஆடும் ஆட்டம். ஆடவர்கள் தலையில் முண்டாசும், கழுத்தில் பூமாலையும், காலில் சலங்கையும் அணிந்திருப்பர். கையில் கைகுட்டை வைத்திருப்பர். இரண்டு அணி எதிர் எதிராக நின்று ஆடுவர். ஒயிலாட்டம் சந்தத் தமிழின் சொந்தக் குழந்தையாய்ப் புராண, இதிகாச வரலாற்றுக் கருவூலமாய்ப் பக்திப் பயிர் விளைவிக்கும் நன்னிலமாய்த் தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாக விளங்குகிறது. பெரும்பாலும் இராமாயணக் கதைகளே பாடல்களாக பாடப்படுகின்றன. இது தவிர பவளக்கொடி கதை, மதுரை வீரன் கதை, முருகன் கதை, சிறுத்தொண்டர் கதை, வள்ளி திருமணக் கதைகளைப் பாடி ஆடுவதுண்டு. ஒயிலாட்டத்தின் வரன் முறைகளாவன: ஒரே வரிசையில் ஆடுவதும் உண்டு. ஒயில் கும்மியின் அடிப்படை ஆட்டம் பதின்மூன்று. ஒவ்வொரு ஆட்டத்திலும் உட்பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு ஆட்டத்திற்கும் அடிமுறை மாறும். ஓயிலாட்டத்தைப் பற்றிய பாடல்

"தேரோடும் எங்கள் சீரான மதுரையிலே
ஊரார்கள் கொண்டாடும் ஒயிலாட்டம்
சிறகை விரித்தால் மயிலாட்டம்
சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம்
சீறிப்பாய்ந்தால் புலியாட்டம்
திரையில் மறைந்தால் நிழலாட்டம்"[4]

என்றவாறு ஒயிலாட்டத்தின் சிறப்பினை எடுத்துரைக்கிறது. "ஆளோடு ஆள் உரசாமல் உங்கள் ஆளிலே ஒரு முழம் தள்ளி நின்று காலோடு கால் உரசாமல் உங்கள் கைப்பிடித் துணி தவறாமல் மேலோடு மேல் உரசாமல் உங்கள் வேரூவை தண்ணீ சிதறாமல்"[5]என்ற பாடல் ஒயிலாட்டத்தின் இலக்கணங்களை எடுத்துரைக்கிறது.

**புலியாட்டம்:**

புலி போன்று வேடமணிந்தவரும் வேட்டைக்காரர் போன்று வேடமணிந்தவரும் சேர்ந்து ஆடும் ஆட்டம் புலிஆட்டமாகும். இவ்வாடலில் ஆடலும் இசையும் கலந்திருக்கும். தேரோட்டத் திருவிழாக் காலங்களில் இவ்வாட்டம் நடத்தப்படுகின்றது. புலி வேடமிட்டிருப்பவர் புலியின் முகம் போன்ற முகமூடியை முகத்தில் அணிந்துக்கொண்டு புலித்தோல் போன்ற அரைக்கால் சட்டையும், புலிவால் போன்ற அமைப்பையும் அணிந்து கொள்வார்.உடலில் மஞ்சள் வண்ணக் குழம்பாலும், கறுப்பு வண்ணக் குழம்பாலும் வரி வரியாகக் கோடுகளை வரைந்துக் கொள்வார். காலில் சலங்கைக் கட்டிக் கொள்வார். புலி வேடக்காரரின் இடையில் கயிறு ஒன்றைக்கட்டி அதனை ஒருவர் பிடித்துக் கொள்வார். வேட்டைக்காரர் போன்று வேடமிட்டிருப்பவர் புலியைச் சுட குறி பார்ப்பது போன்று பதுங்கியும், பாய்ந்தும் வருவது போன்று ஆடிக் காட்டுவார். இக்கலை தனித்தும், கரடி ஆட்டத்துடன் இணைந்தும் ஆடப்படுவதுண்டு.

**தோற்பாவைக் கூத்து:**

தோற்பாவைகளின் நிழல்கள் மூலம் இக்கூத்தை நடத்திச் செல்வதால் தோற்பாவை நிழற்கூத்து என்கின்றனர். தோற்பாவைக் கூத்தை ஆந்திராவில் தோலு பொம்மலாட்டா என்றும் மைசூரில் தொகலு மொம்மே ஆட்டா என ஒவ்வொரு ஊரிலும் வேறு பெயர்களால் அழைத்துவருகின்றன. “கேரளாவில் தோல்பாவைக் கூத்து அல்லது நிழற்காட்சி என்றும் ஒவ்வொரு ஊரிலும் ஒரு சிறப்புப் பெயருடன் வழங்கப்படுகின்றன”[6]. பாவைக்கூத்தில் மூன்று முதல் ஆறுபேர் இருப்பர். பாவைகளை இருவர் ஆட்டுவிப்பர். இருவர் பாடுவர். திறந்தவெளி அரங்கில் வெள்ளைத் திரைகட்டி நடுவில் விளக்கு தொங்க விட்டிருப்பர். விளக்குக்கும் திரைக்கும் நடுவில் பாவைகள் இயக்கப்படும். காலில் கட்டை அணிந்து ஒலி எழுப்புவர். இராமாயணம், நல்ல தங்காள் கதை, அரிச்சந்திரன் கதை போன்றவற்றைத் தோற்பாவைக் கூத்தின் மூலம் நடத்தினால் நாட்டில் மழை பெய்யும் என நாட்டுப்புற மக்கள் நம்பியமை வெளிப்படுகிறது. முதன் முதலாக தோற்பாவைக் கூத்து சீனாவில் நடத்தப்பட்டதாகவும், பிறகு இந்தோனேசியா வழியாக இந்தியாவிற்கு வந்ததாக கூறுவர். 12ஆம் நூற்றாண்டு முதல் இந்தியாவில் பாவை கூத்து இருந்ததாக அறிகிறோம். அமெரிக்கா போன்ற நாடுகளில் சிறுவர் நிகழ்ச்சியாக நடத்தப்படுகின்றது. இந்தியாவை பொருத்தவரையில் தென்மாநிலங்களில் இக்கலை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாட்டுப்புறக் கலைகளை பேணி அவற்றை பற்றி அறிவியல் சார்ந்த ஆய்வு மேற்கொள்ளும்போது வருகின்ற சமுதாயத்திற்கு நல்ல பயனுள்ளதாக இருக்கும். தோற்பாவைக்கூத்தை நடத்தும் கலைஞர்கள் தங்களின் இருப்பிடத்தில் இருந்து குடும்பத்தோடு கிளம்பி பல ஊர்களில் நிகழ்ச்சி நடத்தி மீண்டும் ஆறு மாதங்கள் கழித்து சொந்தகிராமத்திற்கு திரும்புகின்றனர். ஆகவே இவர்கள் நாடோடி கலைஞர்களாக கருதப்படுகிறார்கள்.

**சிலம்பாட்டம் :**

கம்புகளைக் கொண்டு ஒலியெழுப்பும் விளையாட்டுக்குச் சிலம்பாட்டம் என்று பெயர். சிலம்புதல் என்பதற்கு ஒலித்தல் என்ற பெயர் உண்டு. தமிழர்களின் தற்காப்புக்கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டுகளுள் ஒன்றாகும். இவ்விளையாட்டைக் கம்பு சுழற்றுதல் என்றும் கூறுவார்கள். இது கையை கையாளும் முறைகள், கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மை பாதுகாத்து கொள்ளுதல் எனப் பலக் கூறுகளை கொண்ட செறிவான தற்காப்பு கலையாகும். சிலம்பாட்டத்தில் எதிரில் நிற்பவர் வீசும் கம்பினைத் தடுத்தல், உடலினை சிலம்பு கம்பினால் தொடுதல் (தொடுபுள்ளி) போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. சிலம்பினைக் கற்றுக் கொள்வதற்கு ஆறுமாத பயிற்சி இன்றியமையாததாகும். சிலம்பைக் கற்றுக் கொள்வதற்கு இரண்டு பேர் வேண்டும். இன்றைய சூழலில் இருபாலரும் சிலம்பாட்டத்தை கற்றுக்கொண்டு செம்மையாக விளையாடுவதை பார்க்க முடிகிறது. திருவிழா, கோயில் விழாக்கள் மற்றும் ஊர்வலங்களில் சிலம்பாட்டம் தவறாது இடம் பெறுகிறது. எடுத்துக்காட்டாக திருவள்ளூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சை, நாகை, மயிலாடுதுறை எனப்பல மாவட்டங்களில் பெருமளவு நடக்கிறது. அது மட்டுமல்லாமல் பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களிடையே சிலம்பாட்டம் பயிற்சி அளிக்கப்பட்டு, போட்டிகள் வைத்து பரிசுகளும் வழங்கப்படுகின்றன. சிலம்பாட்டம் என்பது சிறந்த உடற்பயிற்சியாகும். கம்பு எடுத்து சுழற்றும் போது உடம்பில் உள்ள ஒவ்வொரு நாடி நரம்பும் தசைகளும் இயக்கப்படுகின்றன. இது உடலின் வலிமை, ஆற்றல், விரைவுத்திறன், உடல் நெகிழ் தன்மை ஆகியவற்றை அடைய சிலம்பம் பயிற்சி உதவுகிறது. இவ்விளையாட்டு வீர விளையாட்டாக தோற்றம் பெற்று நுட்பமான செயல் திறனுடன் சிலம்பாட்டம் எனும் கலையாக விளங்குகின்றது.

**முடிவுரை :**

நாட்டுப்புறக் கலைகள் சமூகத்தின் கலாச்சார வாழ்க்கையை பிரதிபலிக்கின்றன. ஒருநாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினை பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமின்றி தகவல் ஊடகமாகவும் பண்பாட்டின் பாலமாகவும் திகழ்கிறது. நாட்டுப்புறக் கலைகள் நமது மண்ணோடும், நம்மோடும் தொடர்புடையவை. இவைகள் தனக்கே உரித்தான தன்மைகளையும் சிறப்புகளையும் கொண்டவை. பொழுது போக்கிற்காக மட்டுமின்றி மனவளர்ச்சிக்கும், சமூகவளர்ச்சிக்கும் வளம் சேர்ப்பவனாகும். தமிழக நாட்டுப்புறக் கலைகள் பல்வேறு வகைகளில் சிறப்பும் தனித்தன்மையும் கொண்டவையாக திகழ்கின்றன.

சான்றேண் விளக்கம்

1. தொல். பொருள். –இளம் நூ – 615
2. புறநானூறு பா – 1
3. சுப்பு ஆறுமுகம் – காந்திவந்தார் (வில்லுப்பாட்டு 1-5)
4. சு.சக்திவேல் – நாட்டுப்புற இயல் ஆய்வு (ப – 175)
5. அ .பூபாலன் –நாட்டுப்புறக் கலைகள் மற்றும் வீர விளையாட்டுகள் (ப – 135)

6. இராமசுவாமி – தோல்பாவைக் கூத்து (ப - 485-488)

துணை நூற்பட்டியல்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம்

இளம்பூரணர்உரை

தமிழ்ப்பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் – 613 010

2 நாட்டுப்புற இயல் ஆய்வு

டாக்டர்.சு.சக்திவேல்

மணிவாசகர் பதிப்பகம்

சென்னை – 600 108

3. புறநானூறு

உ.வே.சாமிநாதன் நூலக நிலையம்

அருண்டேல் கடற்கரை சாலை

பெசன்ட்நகர், சென்னை – 600 090